பக்கங்கள் நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 4.00

சுடர்: 6 பிரமோதூத ஹூ தை மீ 12 உ வெள்ளிக்கிழமை (25-01-1991) UTHAYAN - A LIVELY TAMIL NATIONAL DAILY கதிர்: 59

# பதுக்கலைக் கண்டித்து நகரில் நேற்றுப் பேரணி!

## ஆவேசத்துடன் மக்கள் திரண்டனர்

யாழ்ப்பாணம், ஜன. 25

**பதுக்கல், கள்ளச் சந்தை மற்றும் வியாபாரிகளின் சுரண்டல் ஆகியவற்றைக் கண்டித்து குடாநாட்டு மக்கள் ஆயிரக்கணக்கில் நேற்று திரண்டு எழுந்து, ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்றை நடத்தினர்.**

பொருளாதார, கல்வித் தடைகளை அகற்றக்கோரியும், பதுக்கல் வியாபாரிகளை அம்பலப்படுத்தக் கோரியும் பேரணியில் கோஷங்கள் எழுப்பப்பட்டன.

நேற்றுக் காலை 10 மணிக்கு யாழ் பல்கலைக் கழகத்தில் இருந்து இந்தப் பேரணி ஆரம்பமானது.

யாழ். குடாநாட்டின் பல பகுதிகளிலும் இருந்து-வயது வேறுபாடின்றி-மக்கள் இந்தப் பேரணியில் பங்குபற்றினார்கள்.

பல்கலைக் கழகத்தில் இருந்து ஆரம்பமான பேரணி பலாலி வீதி, ஆரியகுளம் சந்தி, ஸ்ரான்லி வீதி, றக்கா வீதி சந்தியூடாக கோவில் வீதியை அடைந்து இறுதியில் செயலகத்தில் முடிவடைந்தது.

[4 ஆம் பக்கம் பார்க்க]

## மேஜர் மக்கன்ரோ வீரமரணம்

யாழ்ப்பாணம், ஜன. 25

நேற்றுக்காலை 7.30 மணியளவில் ஆனையிறவு இராணுவ முகாமிலிருந்து வெளியேற முற்பட்ட படையினருடன் இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் இயக்கப் போராளியான மேஜர் மக்கன்ரோ (சதாசிவம் புலேந்திரன் - கனகராயன்குளம்) வீரமரணமடைந்தார். (உ)

## வலைப்பாடு துறைக்கு முதல் தடவை கப்பல்

யாழ்ப்பாணம், ஜன. 25

கிளிநொச்சி மாவட்டத்துக்குத் தேவையான உரவகைகளை ஏற்றிக்கொண்டு முதல் தடவையாக வலைப்பாடு துறைக்கு கப்பல் ஒன்று அடுத்த வாரம் வரவிருக்கிறது.

''எம். வி. லில்லி'' என்ற இந்தக் கப்பலில் 200 தொன் உரமும் கிளிநொச்சி மாவட்டத்துக்கு தேவையான பாடப் புத்தகங்களும் எடுத்து வரப்படும். வலைப்பாட்டில் இந்தப் பொருள்களை இறக்கிய பின்னர் கப்பல் பருத்தித் துறைக்கு வந்து, மிகுதிப் பொருள்களை இறக்கும்.

## இலவச பாடநூல் கப்பலில் வருகிறது

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ். மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்கு வேண்டிய இலவச பாடநூல்கள் கப்பல் மூலமாக வந்து சேரவுள்ளன.

முதல் தொகுதி பாடப் புத்தகங்கள் ''லங்கா சிறி'' கப்பல் மூலமாகவும் —

மற்றொரு தொகுதி பாடப் புத்தகங்கள் 'எம். வி. லில்லி' கப்பல் மூலமாகவும் வரவுள்ளன.

கொழும்பு சென்ற கல்வி அலுவலக அதிகாரிகள் கப்பல் கூட்டுத்தாபன தலைவருடன் பேச்சு நடாத்தி இந்த பாடப் புத்தகங்களை கப்பல் மூலம் அனுப்ப ஏற்பாடு செய்துள்ளனர். (உ-3)

## ஒப்பந்தம் குறித்து சுக்லாவுடன் பேச்சு

கொழும்பு, ஜன. 25

1987 இல் கைச்சாத்திடப்பட்ட இலங்கை — இந்திய ஒப்பந்தத்தில் நிறைவேற்றப்படாத அம்சங்கள் குறித்து இந்திய வெளியுறவு அமைச்சர் சுக்லாவுடன் நடத்தப்படும் பேச்சுக்களின்போது ஆராயப்படவுள்ளது.

இத்தகவலை வெளிவிவகார அமைச்சர் ஹரோல்ட் ஹெரத் கடந்த புதன்கிழமை நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இதற்கிடையில்—

இனப்பிரச்சினைக்கு சமாதானத் தீர்வைக்கான உதவும் எந்த அம்சத்தையும் இந்திய அரசுடன் விவாதிக்க இலங்கை அரசு திறந்த மனதுடன் தயாராக உள்ளது என்று அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தினா கூறியுள்ளார்.

1987 இல் செய்து கொள்ளப்பட்ட இலங்கை—இந்திய ஒப்பந்தம் ஒரு பழைய கதை

ஆனால் இந்திய வெளியுறவு அமைச்சர் வி. சி. சுக்லா விரும்பும் எதனையும் இலங்கை அரசு அவருடன் விவாதிக்கும் என்று—திரு. விஜேரத்தினா சொன்னார்.

## ஈச்சிலம்பத்தையில் 3 தமிழர் கொலை!

மூதூர், ஈச்சிலம்பத்தை தமிழ்க் கிராமத்தில் ஒரு தமிழரின் மகன், மகள், மனைவி ஆகியோர் இனந்தெரியாதோரால் வெட்டிக்கொலை செய்யப்பட்டுள்ளனர்.

சென்ற 7 ஆம் திகதி காணாமற்போன இம் மூவரின் சடலங்கள் வெட்டுக்காயங்களுடன் மிகுந்தபுர என்னுமிடத்தில் இம்மாதம் 12 ஆம் திகதி காணப்பட்டன என்றும்—

பின்னர் அச்சடலங்கள் மர்மமாக மறைந்துவிட்டன என்றும் பொலிஸில் முறையிடப்பட்டது. (உ-3)

## "சுடுகாட்டில் சங்கீதம்"

யாழ்ப்பாணம், ஜன. 25

''எரியும் சுடுகாட்டில் வர்த்தகர்கள் சங்கீதக் கச்சேரி'' — மேற்கண்ட கோஷம் நேற்றைய பேரணியில் ஒலித்தது. அங்கு ஒலித்த மேலும் சில கோஷங்கள் வருமாறு;-

★ பொம்மருக்கும் பங்கர்; அங்கருக்கும் பங்கர்!

★ சிங்கள இனவாதத்துக்கும், கொள்ளை வியாபாரிகளுக்கும் என்ன வித்தியாசம்?

★ பதுக்கல்காரருக்கும் மனிதாபிமானம் உண்டா!

★ விலையேற்றம் என்ன சூறையாட்டமா?

★ திட்டமிட்ட பதுக்கலை அம்பலப்படுத்து! [உ-3]

## விமான எரிபொருள் விலை உயர்வு

இலங்கை பெற்றோலியம் கூட்டுத்தாபனம் ஜெட் விமானங்களுக்கான எரிபொருளின் விலையை கடந்த வெள்ளிக்கிழமை முதல் சுமார் 16 வீதம் அதிகரித்துள்ளது.

வளைகுடாப் போரினால் உலகில் விமான எரிபொருளின் விலை வெகுவாக அதிகரித்துள்ளது. (உ-எ)

## முச்சந்தி முரளி



பதுக்கல்காரரை கண்டிக் கிறோமென ... [illegible]

## தொண்டர் ஆசிரியருக்கு நியமனம்
## நேர்முகப் பரீட்சை மட்டுமே நடக்கும்

யாழ்ப்பாணம், ஜன. 25

யாழ். மாவட்டத்தில் தொண்டர் ஆசிரியர்களுக்கு நேர்முகப் பரீட்சையின் பின்னர் நிரந்தர நியமனம் வழங்கப்படும். இதற்காக போட்டிப் பரீட்சை ஏதும் நடைபெற மாட்டாது.

இந்த விடயம் தொடர்பாக கொழும்பில் மேலதிகாரிகளுடன் பேசிய பின்னர், யாழ் திரும்பிய யாழ். கல்வித் திணைக்கள பிரதம கல்வி அதிகாரி திரு. எஸ். தங்கராஜா இத்தகவலைத் தெரிவித்தார்.

நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவோர் தாம் தொண்டர் ஆசிரியராகக் கடமையாற்றுவதை கல்லூரி அதிபர் மூலமும், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் போன்ற அமைப்புகள் மூலமும் உறுதிப்படுத்த வேண்டும் என்றும் அவர் சொன்னார். (உ-3)

## செஞ்சிலுவை லொறி மீது ஹெலித் தாக்கு!

வவுனியாவிலிருந்து மடு அகதிகளுக்கு பொருள்களை ஏற்றி வந்த செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின்-இரண்டு லொறிகள் மீது கடந்த திங்களன்று பெரிய தம்பனையில் இரண்டு ஹெலிகள் துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

இச்சம்பவத்தில் லொறிகள் சேதமடைந்தன. [உ]

## வல்வையில் அமைதி

நான்கு நாள் அகோர விமானக் குண்டு வீச்சின் பின்னர் வல்வெட்டித்துறைப் பகுதி நேற்று ஓய்ந்து காணப்பட்டது.

வல்வையிலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் தமது இருப்பிடங்களை சென்று பார்வையிடும் முயற்சியில் ஈடுபட்டனர்.

தொண்டமனாறு முதல் நெடியகாடுவரையுள்ள பகுதிகள் மயானம்போல் காட்சி அளிப்பதாகவும் பத்துக்கு மேற்பட்ட வெடிக்காத குண்டுகள் அப்பகுதியில் இடப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது (உ-3)

## மார்ச் மாதத்தில் மூன்று பரீட்சைகள்

யாழ்ப்பாணம், ஜன. 25

வடக்கு, கிழக்கு மாணவர்களுக்கான விசேட ஜி. சீ. ஈ. உயர்தர மற்றும் சாதாரண தர பரீட்சைகளையும், 5 ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையையும் மார்ச் மாதத்தில் ஒரே நேரத்தில் நடத்த பரீட்சைத் திணைக்களம் ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றது.

கொழும்பு சென்று திரும்பிய யாழ். கல்வி அலுவலக உயர் அதிகாரி ஒருவர் இந்தத் தகவலைத் தெரிவித்தார்.

பரீட்சைகளை நடத்துவது குறித்து ஆராய யாழ்ப்பாணம் வந்த பரீட்சைத் திணைக்கள அதிகாரி கொழும்பு திரும்பியதும் பரீட்சைக்கான திகதி முடிவு செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. [உ-3]

## ஆபத்து! அஸ்பிரின்!!

யாழ்ப்பாணம், ஜன. 25

பெற்றோர்களே கவனம்! உங்கள் 12 வயதுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்குக் காய்ச்சல் வந்தாலும் அஸ்பிரின் கொடுக்காதீர்கள்!!

யாழ்ப்பாண மாவட்டத்தில் இப்போது பனடோலுக்குப் பெரும் தட்டுப்பாடு. அதன் காரணமாக பனடோலுக்குப் பதிலாக சிறுவர்களுக்கும் அஸ்பிரினே அதிகமாகக் கொடுக்கப்படுகிறது.

சிறுவர்களுக்கு அளவுக்கு அதிகமாக அஸ்பிரின் கொடுப்பதால் ஈரல், மூளை பாதிக்கப்பட்டு மரண அபாயம் ஏற்படும் ''றெயிஸ் சின்ட்றோம்'' (Reyes Syndrome) என்ற நோய் வருகிறது

அஸ்பிரின் பாவித்ததால் இந்நோய்க்கு ஆளான பல சிறுவர்கள் இப்போது யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஆகையால் 12 வயதுக்கு உட்பட்ட சிறுவர்களுக்கு காய்ச்சலுக்கோ அல்லது வேறு நோய்களுக்கோ அஸ்

(4 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

இரண்டு மாதம் நிரம்பிய இரண்டு ஜேர்மன் செப்போட் இன அல்சேசன் நாய்க்குட்டிகள் [கடுவன்] விற்பனைக்கு உண்டு. தொடர்பு: K. S. R. போட்டோ, இல 12A, சந்தபுராணவீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (15245)

அல்சேசன் நாய் (நல்லின 1½ வருட ஆண்) சுவர்க் கடிகாரங்கள், மேசை மணிக்கூடுகள், Fridge ஆகியன விற்பனைக்குண்டு. No 12, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம். (15242)

## பரீட்சை வினாத்தாள்

மார்ச் 1991 O/L பரீட்சைக்கு உதவியாக Dec 1990 இல் நடைபெற்ற O/L பரீட்சை வினாத்தாள் தொகுதி (ஆங்கிலம், சமூகக்கல்வி சமயபாடக் கோட்டுப்படம் வினாத்தாள் உட்பட) விற்பனையாகிறது. மொத்தமாக வாங்குவோர்க்கு விலைக் கழிவு உண்டு; ஆங்கில வினாத்தாள் தனியாகவும் பெற்றுக் கொள்ள முடியும். எக்ஸ்சிறல் இன்ஸ்ரிரியூட், இருபாலைச் சந்தி. (15580)

## கல்வி

கல்யாணி ஆங்கில கல்வி நிலையம் 204, மானிப்பாய் றோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம். பின்வரும் ஆங்கில பயிற்சிகள் நடைபெறுகின்றன. சனி, ஞாயிறு வகுப்புகள் தனிப்பட்டவர்களுக்கான பயிற்சி (Individual-tuition) உங்கள் வீடுகளுக்கு வந்துக் கற்பிக்கப்படும் (House Visits) பயிற்சிகள் அனைத்தும் இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் நடத்தப்படும். (15563)

## ரைப்பிங் சேவை

தமிழ் - ஆங்கிலம் (Steno) ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். மற்றும் தமிழ் - ஆங்கிலம் ரைப்பிங் வகுப்புகள் நடைபெறுகிறது. Fido, 89/17, மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (பஸ் நிலைய முன்பாக) (சி/5664)

## சோதிட மாந்திரீக நிபுணர்

உங்கள் பிரச்சினை எதுவாயினும் உடனடியாகத் தீர்வு காண்பதற்கு மட்டக்களப்பு பரம்பரை சோதிட மாந்திரீக நிபுணரைக் கலந்தாலோசியுங்கள். "சக்தி சரவணா" 210, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (யாழ்ப்பாண இந்துக் கல்லூரி மைதானம் முன்பாக) தினசரி பகல் 9 மணி தொடக்கம் 8 மணி வரை சந்திக்கலாம். வியாழன் விடுமுறை. (15597)

## மணமகள் தேவை

30 வயது நிரம்பிய டாக்டர் மணமகனுக்கு கிரகபாவம் குறைந்த உயரமான அழகிய பெண் தேவை. விபரங்களுடன் வந்து சந்திக்கவும். 30வயது நிரம்பிய வங்கி உத்தியோகத்தருக்கு உதயத்து செவ்வாய் பாவம் குறைந்த சாதகம், அழகிய பெண் தேவை. நட்சத்திரம் அச்சுவினி. தொடர்பு: ABCDE விவாகப்பொருத்துனர் 328, நாவலர்றோட், ஆனைப்பந்தி. (15602)

யாழ். இந்து 27 வயது நிரம்பிய U K இல் M.S C. Civil Engineerக்கு படித்த பெண் U. K இல் தேவை. 25 வயது நிரம்பிய U. K. M. B A; படித்துக்கொண்டிருக்கும் மணமகனுக்கு அழகிய பெண் U. K. இல் தேவை; தொடர்பு: ABCDE விவாகப் பொருத்துனர், 328, நாவலர் றோட், ஆனைப்பந்தி. (15603)

---

# சித்ராலயா ஸ்ருடியோ

தரமான போட்டோஸ்ரற் பிரதிகளுக்கும், கறுப்பு, வெள்ளை புகைப்படங்களுக்கும்

**சித்ராலயா**
351, கோவில் வீதி,
நல்லூர்.

(நல்லூர் கோவில் பின் வீதியில், கம்பன் கோட்டத்திற்கு முன்பாக) (C/5681)

---

# வேம்படி மகளிர் கல்லூரி

## பழைய மாணவர் சங்கம்
## 75ஆவது ஆண்டு நிறைவு
## விசேட பொதுக் கூட்டம்

**1991 - 01 - 30 பிற்பகல் 2 30 மணிக்கு**

கல்லூரி மண்டபத்தில் நடைபெறும் இக்கூட்டத்திற்குப் பழைய மாணவர்கள் அனைவரையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

செல்வி இ. இராஜரெட்ணம், தலைவர்.
செல்வி ச. தர்மலிங்கம், செயலாளர். (15605)

---

# The Jaffna Education Centre.
## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
(சாந்தி சினிமா முன்பாக மேல் மாடியில்)

## G.C.E. O/L "90" ஏப்பிரல் (April)

G.C.E. O/L DAY CLASSES
ஆரம்பம் 26 - 1 - 91
EVENING CLASSES
ஆரம்பம் 28 - 1 - 91
91. Dec. O/L ஆண்டு 6, 7, 8, 9, 10.
ஆரம்பம் 26 - 1 - 91
SPOKEN ENGLISH SHORT HAND TYPING

இருமொழிகளிலும் நடைபெறுகின்றன. புதிய பிரிவுகள் 26 - 1 - 91 இல் ஆரம்பமாகின்றன. "பெண்களுக்கு விடுதி" வசதியும் உண்டு. (15601)

---

அருட்திரு
# ● B. A. தோமஸ் ●
O.M.I. அடிகளின்
# 27வது ஆண்டு நிறைவுதினமும் முதல் திருப்பலியும்

இடம்: யாழ். அருள் ஆச்சிரமம்
காலம்: 26 - 01 - 1991 சனிக்கிழமை
திருப்பலிகள்: காலை 6 மணி
மாலை 5 மணி (கூட்டுப்பலி)

தோலகட்டி செபமாலை தாசர் சபையின் புதியகுரவர் அருட்திரு மனுவேல் சவிரிமுத்து C.R. அடிகள் தனது முதலாவது திருப்பலியை மாலை 5 மணிக்கு ஒப்புக் கொடுப்பார்.

குறிப்பு: தோலகட்டி ஆச்சிரமம் இராணுவ நடவடிக்கை காரணமாக தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. எனவே சகல வழிபாடுகளும், தோலகட்டியின் செயற்பாடுகளும், யாழ். அருள் ஆச்சிரமத்தில் நடைபெறும்.

இயக்குனர்,
அருள் ஆச்சிரமம்,
5 கோவில் வீதி, யாழ்ப்பாணம்.

தோமஸ் அடிகள் வழியாக பெற்றுக்கொண்ட சகல நன்மைகளுக்காகவும் நேர்த்திப்படி பிரசுரிக்கின்றோம்.

அ. பிரான்சிஸ் குடும்பத்தினர்,
புனித செபஸ்தியார் வீதி,
பளை, வயாவிளான்.
(15590)

---

# வில்லியம் ஹார்வே ஞாபகார்த்த மருத்துவமனை
# William Harvey Memorial Hospital

பொதுமக்களின் நலன் கருதி மீண்டும் செயலாற்ற முன்வந்துள்ளது. வில்லியம் ஹார்வே ஞாபகார்த்த மருத்துவமனை வைத்திய நிபுணர்களின் ஆலோசனை பெறவும் ஆய்வுகூட மருத்துவப் பரிசோதனைகளுக்கும் தரமான சிகிச்சைகளுக்காகவும் இரவு பகல் சேவையை 1991 ஜனவரி 26ஆம் திகதி முதல் வில்லியம் ஹார்வே ஞாபகார்த்த மருத்துவமனை மீண்டும் செயலாற்ற முன்வந்துள்ளது.

— நிர்வாகம்

17, Kandy Road.
Chundikuli, Jaffna. (C/5684)

---

# 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திருமேனி ஐயாத்துரை
(முன்னாள் பிரதம சுகாதாரப்பரிசோதகர்)

தோற்றம்: 2 - 12 - 1911
மறைவு: 25 - 1 - 1990
திதி: 14 - 1 - 91

இப்பூவுலகை விட்டு மறைந்து ஓராண்டு பூர்த்தியாகும் இன்று அன்னாரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உறவினர்கள்.
"கணேசபதி"
ஆர். கந்தையாவீதி,
சாவகச்சேரி. (15572)

---

# 45 ஆம் நாள் நினைவஞ்சலி

அன்னை மடியில்:
08 - 08 - 1956

பிள்ளையார் அடியில்:
12 - 12 - 1990



## ● அமரர் சிவப்பிரகாசம் சிவகுமாரன் ●
(இயந்திரப் பொறியியலாளர் சிமெந்து ஆலை, காங்கேசன்துறை)

தாய்வழி, பிதாவழி இரண்டையும் உறவினர், அயலவர்களையும் உன்னத நிலைக்கு ஆளாக்க எண்ணிய உமது ஆவலை காலன் அழித்தானே; குணக்குன்றே! கலை விளக்கே! சைவ ஒளியே! உம்மை எண்ணி பெற்றோர், சகோதரர், உறவினர்கள் கவலைக் கடலில் ஆழ்கிறோம்.

உமது ஆத்மா [illegible]
மண்டைதீவு - 5 (15586)

---

# 31-ம் நாள் நினைவஞ்சலி



மலர்வு: 13 - 4 - 1931
●
உதிர்வு: 26 - 12 - 1990

நாட்டியக்கலா ரத்தினம்
## ஆசிரியர் திரு. வெ. இராஜரட்ணம்
(யா/மல்லாகம் மகா வித்தியாலயம்)

நெரு நல் உளனொருவன்
இன்றில்லையென்னும் உடைத்திவ்வுலகு

திருமதி இராஜரட்ணம் குடும்பத்தினர்.
மல்லாகம். (15609)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## தப்புவதற்கு முயல்வரா?

அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் அன்றாடப் பாவனைப் பொருள்களின் விலைவாசிகள் தமிழ்ப் பகுதிகளில், ஆகாயப் பந்தலாக நாளாந்தம் உயர்ந்து, பரந்து, படர்கின்றன. அரசாங்கம் தொடர்ந்து நடத்தும் போரினால் தொழில் இழந்து, வருமானம் இழந்த, அவதியுறும் தமிழ் மக்களின் கைக்கு சிறிதேனும் எட்டமுடியாத அளவுக்கு அவை வானோங்கி உயர்ந்து விட்டன.

கொழும்பிலிருந்து உணவுப் பொருள்களைக் கொண்டு வருவதில் உள்ள தடைகள், தடங்கல்களே தமிழ்ப் பகுதிகளில் விலைவாசிகள் எக்கச்சக்கமாக உயர்வதற்கு முதற் காரணம். அரசின் மறைமுகப் பொருளாதாரத் தடையைப் பயன்படுத்தி கொள்ளை லாபம் அடிக்கும் இந்த மண்ணின் சொந்த வியாபாரிகள் இரண்டாவது காரணர்கள்.

தமிழ் மக்களை உயிர்க் கொல்வி இராட்சதனாக வந்து பயமுறுத்தும் விலைவாசி உயர்வைத் தடுக்கும் முயற்சியில், வர்த்தகர் சங்கம் சில அவசியப் பண்டங்களுக்கு விலைக்கட்டுப்பாட்டைக் கொண்டு வந்தது; ஆனால் அதனைக் கண்டதும், சந்தைக்கு விட்டிருந்த பல பொருள்களை வியாபாரிகள் ஒளித்துவிட்டனர்!

ஒரு சில வியாபாரிகள் மட்டும், நியாய சிந்தையுடன் தம்மிடம் இருக்கும் பொருள்களை வாடிக்கையாளர்களுக்குப் பங்கிட்டு வழங்குகிறார்கள்; ஆனால் மிகவும் பெரும்பாலானவர்கள் பதுக்கல், கொள்ளை லாபம் என்ற இரண்டையும் கட்டிப்பிடித்துக் கொண்டாடுகிறார்கள்!

இலங்கை அரசு நடத்தும் யுத்தத்துடன் வளைகுடா யுத்தம் வேறு; இரண்டும் சமகாலத்தில் இடம்பெறுவதால் தமது பதுக்கல், கொள்ளை லாபத்தை பல மடங்காக்கி பணம் தேட முனைகிறார்கள், தமிழ் வியாபாரிகள். மனச்சாட்சி என்பதைப் பிடுங்கித் தூர எறிந்து விட்டு, மனிதாபிமானம் என்ற ஒன்றுண்டு என்பதை மறந்து செயற்படுகிறார்கள்.

மக்களின் கஷ்டங்களைச் சிறிதும் உணராத அசாதாரணப் பிறப்புகள் என்று சாடும் அளவுக்கு வியாபாரிகளின் போக்கு மிகவும் மெத்தனமாக உள்ளது. வியாபாரிகள் இதே போக்கினைத் தொடருவார்களானால் மக்கள் சக்தி அவர்களுக்கு எதிராகத் திரளும் என்பதை அவர்கள் மறந்துவிடக் கூடாது.

பஞ்சம், பட்டினி மக்களை வாட்டும்போது அவர்கள் புரட்சியாளர்களாகவும், போராளிகளாகவும் மாறிவிடுவர். இது இயற்கையின் நியதி. மக்கள் சக்தி மலை போலத் திரண்டு எழுந்தால் வியாபாரிகள் தேடும் பணமும், பதுக்கும் பொருள்களும் பறிபோய்விடும். அதனைத் தடுத்து நிறுத்த எந்தச் சக்திக்கும் வலு இல்லாமற் போய்விடும்.

காலமும், சூழ்நிலையும் எப்போதும் ஒருசாராருக்குச் சாதகமாக இருப்பதில்லை. பலரைச் சில காலம் மோசடி செய்யலாம். சிலரைப் பல காலம் மோசடி செய்யலாம். எல்லோரையும் எல்லாக் காலமும் மோசடி செய்ய முடியாது. அவ்வாறு செய்ய நினைப்பவர் ஆபத்தில் சிக்கித் தவிக்க நேரிடும்.

இதனை, இந்தக் கட்டத்திலாவது தமிழ்ப்பகுதி வியாபாரிகள் உணர்ந்து செயற்பட்டு, ஆபத்திலிருந்து தப்ப முயல்வார்களாக!

# எதுவும் தாக்க முடியாத சதாமின் பதுங்குகுழி!

பொன், ஜன. 25

எந்தச் சக்தி வாய்ந்த அணுகுண்டு வெடித்தாலும் எவ்வித பாதிப்பும் ஏற்படாத விதத்தில், எல்லா வசதிகளுடனும் வாழக்கூடிய ஆடம்பர பதுங்கு குழி ஒன்றிலேயே ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசெயின் தங்கி உள்ளாராம்.

அந்தப் பதுங்குகுழியை நிர்மாணித்த ஜேர்மன் நிறுவனத்தின் அதிகாரி ஒருவர் இத்தகவலைத் தெரிவித்திருக்கிறார்.

6 கோடி 50 லட்சம் டொலர் [சுமார் 260 கோடி ரூபா] செலவில் நிர்மாணிக்கப்பட்ட இந்தப் பதுங்கு குழி ரேடியோ, கதிரியக்கம், மற்றும் இரசாயன ஆயுதத் தாக்கம் என்பவற்றை எதிர்த்து நிற்கக்கூடியதாகும்.

பக்தாத் நகரில், முந்திய அரச மாளிகைக்கு அருகில் பிரஸ்தாபபதுங்குகுழி இருப்பதாகவும் கட்டடத்தை நிர்மாணித்த நிறுவனத்தினர் அது சம்பந்தப்பட்ட எவ்வித தகவலையும் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படாமல் மிக அந்தரங்கமாக வேலைகள் நடைபெற்றதாகவும் அவர் தெரிவித்தார்.

அந்த நவீன பதுங்கு குழி குறித்து அந்த அதிகாரி வெளியிட்ட ஏனைய சில தகவல்கள் வருமாறு:-

★ சகல நவீன வசதிகளும் பதுங்கு குழியில் உண்டு.

★ பதுங்கு குழியின் கழிவறைகூட சுயசுத்திகரிப்பு முறையுடனும், இரசாயன ஆயுதத் தாக்கத்தை எதிர்க்க வலுவுமாக அமைக்கப்பட்டுள்ளது.

★ சதாமின் படுக்கை அறைக்கு அருகில் உள்ள சுவர் 50 அடி அகலமுள்ள கொங்கிறீட்டினால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. [அ]

# அ.தி.மு. கவினர் இனி சட்டசபைக்கு வரார்!

சென்னை, ஜன. 25

தமிழ் நாடு சட்டசபையை அ. தி. மு. க உறுப்பினர்கள் முற்றாகப் பகிஷ்கரிப்பர்.

அ. தி. மு. க பொதுச்செயலாளர் செல்வி ஜெயலலிதா நேற்று விடுத்த அறிக்கையில் முன் கண்டவாறு அறிவித்தார்.

வன்செயல்களில் ஈடுபட்டதைத் தொடர்ந்து அ.தி.மு. க உறுப்பினர்கள் அனைவரும் நடப்புக்கூட்டத் தொடரிலும் வரப்போகும் பட்ஜட் கூட்டத் தொடரிலும் கலந்து கொள்ள சபாநாயகர் தடை விதித்தது தெரிந்ததே.

மூன்று எம். எல். ஏக்களை மட்டும் கொண்ட ஒரு பிரிவுக்கு ''அ.தி.மு க-2'' என்று சபாநாயகர் அங்கீகாரம் வழங்கியிருப்பது கட்சித்தாவல் தடைச்சட்டத்துக்கு முரணானது என்றும் செல்வி ஜெயலலிதா கூறியுள்ளார்.

1989 மார்ச் மாதத்தில் இருந்து ஜெயலலிதா சட்டசபையை பகிஷ்கரித்து வருவது குறிப்பிடத்தக்கது.

# காங்கிரஸ் வெளிநடப்பு

சென்னை, ஜன. 25

அ.தி.மு.க உறுப்பினர்கள் அனைவரும் தமிழக சட்டசபைக் கூட்டத்தில் கலந்து கொள்ள விதிக்கப்பட்டிருக்கும் சபாநாயகரின் தடை உத்தரவு தொடர்பாக, காங்கிரஸ் எம்.எல். ஏக்கள் நேற்று சட்டசபையில் இருந்து வெளிநடப்புச் செய்தனர்.

நேற்று சபை உபசபாநாயகர் திரு. பி. துரைசாமி தலைமையில் கூடிய போது காங்கிரஸ் துணைத் தலைவர் குமரி அனந்தன் தடை உத்தரவை மீளாய்வு செய்யும்படி கேட்டுக் கொண்டார். அதனை உபசபாநாயகர் ஏற்றுக் கொள்ள மறுத்தார்.

அதனைத் தொடர்ந்து, இவ்விவகாரம் குறித்து கட்சித் தலைமைப்பீடம் முடிவு ஒன்றை எடுக்கும் வரை சட்டசபைக் கூட்டங்களில் காங்கிரஸ் எம். எல். ஏக்கள் கலந்து கொள்ளமாட்டார்கள் என்று கூறி, திரு. குமரி அனந்தன் தலைமையில் அவர்கள் அனைவரும் வெளிநடப்புச் செய்தனர்.

சபாநாயகர் தாக்கப்பட்ட சம்பவத்துக்கு அ. தி. மு. க உறுப்பினர்கள் வருத்தம் தெரிவிப்பின், தண்டனையைக் குறைப்பது பற்றி யோசிக்கலாம் என்று முதலமைச்சர் கருணாநிதி கூறினார் (உ-எ)

# கிராம சேவையாளருக்கு கலந்துரையாடல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 25

மக்களுக்கு ஆற்ற வேண்டிய சேவைகளை திறம்பட செய்வது குறித்து ஆராய்வதற்காக யாழ். மாவட்டத்தில் உள்ள உதவி அரச அதிபர்கள் தத்தமது பிரிவு கிராம சேவையாளர்களுக்கான கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்துள்ளனர்.

இந்த வரிசையில் பருத்தித்துறை, கரவெட்டி, மருதங்கேணி உதவி அரச அதிபர் பிரிவுகளில் உள்ள கிராம சேவையாளர்களுக்கான கலந்துரையாடல் நாளை பிற்பகல் 2 மணிக்கு வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

# ஐ.தே.க-சு.க இணைந்து தீர்வு காண வேண்டும்

## மகாநாயக்கர் வற்புறுத்து

கொழும்பு, ஜன. 25

வடக்கு - கிழக்கில் முடிவில்லாமல் நடந்து வரும் யுத்தத்தை நிறுத்தி இப்போதைய பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஐக்கிய தேசியக் கட்சியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இந்த வேண்டுகோளை பிரபல பௌத்த பிக்குவான வணமடிகே பஞ்ஞாசிக மகாநாயக்க தேரோ இரண்டு கட்சிகளுக்கும் விடுத்துள்ளார்.

கல்கிசையில், [illegible] என்ற இடத்தில் பௌத்த விகாரையில் நடந்த வைபவம் ஒன்றில் பேசுகையிலேயே அவர் ஆளுங் கட்சிக்கும், எதிர்க் கட்சிக்கும் இந்த அழைப்பை விடுத்தார்.

வடக்கு-கிழக்கில் நடக்கும் குட்டியுத்தம் நாட்டின்மீதான பெரும் பளுவாகும். பிரச்சினையைச் சமரசமாகத் தீர்த்து வைப்பதன் மூலம் நாட்டைச் சூழ்ந்துள்ள ஆபத்திலிருந்து காப்பாற்ற வேண்டும் — என்று வண தேரோ கேட்டுக்கொண்டார்.

இனப்பிரச்சினைக்கு ஐக்கிய [illegible] முன் வைக்குமானால் [illegible]

# "பொல்லுக் கொடுத்து அடிவாங்கும் நிலை"

ஈராக்கிற்கு ஆயுதங்களை வழங்கிய நாடுகளுக்கு எதிராகவே அந்த ஆயுதங்கள் வளைகுடாப் போரில் பாவிக்கப்பட்டு வருகின்றன

ஜெனிவாவில் நடந்த ஆயுதபரிகரண மாநாட்டில் சுவிடிஷ் ராஜதந்திரி மேஜர் பிரிட்டிபோரின் இதனைத் தெரிவித்தார்.

## முரண்பாடான தகவல்கள்

வளைகுடாப் போரில் இதுவரை பன்னாட்டுப் படைகளுக்குரிய 232 போர் விமானங்கள் மற்றும் ஏவுகணைகளை சுட்டு வீழ்த்தியதாக ஈராக் உரிமை கோரியுள்ளது

பன்னாட்டுப்படையினரோ, 41 ஈராக்கிய போர் விமானங்களைச் சுட்டு வீழ்த்தியதாகவும் 29 ஈராக்கியரை சிறைப்பிடித்ததாகவும் அறிவித்தனர்.

தமது தரப்பில் 20 போர் விமானங்களை எதிரிப்படைகள் சுட்டு வீழ்த்தின என்று பன்னாட்டுப் படையினர் ஒப்புக்கொண்டனர்.

12 அமெரிக்க வீரர் உட்பட 24 பன்னாட்டு வீரர்கள் போரில் காணாமற் போய்விட்டனர் என்றும் அமெரிக்க தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

## அமெரிக்காவிலும் நடுக்கம்

நியூயோர்க்கில் நச்சுவாயுத் தடுப்பு முகமூடிகளை வாங்குவதில் மக்கள் தீவிர அக்கறை காட்டுகிறார்கள் என்று அறிவிக்கப்படுகிறது.

அடுத்த சில வாரங்களில் நகரில் சதாம் ஹுசேனின் ஆதரவாளர்கள் கெரில்லாத் தாக்குதல்களை பரவலாக நடத்தக்கூடும் என்று அமெரிக்கர்கள் பயப்படுகிறார்கள். இஸ்ரவேலை ஏவுகணைகளால் ஈராக் தாக்கியதைத் தொடர்ந்தே இந்த அச்ச உணர்வு ஏற்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

## பூனை - எலி விளையாட்டு

தரை யுத்தத்தின் போது பயன்படுத்துவதற்காக ஈராக் தன்னிடம் உள்ள நவீன விமான எதிர்ப்பு ஆயுதங்களை பாதுகாத்து வருவதாக பன்னாட்டுப் படைகளின் அதிகாரிகள் தெரிவித்தனர்.

''இப்போது ஈராக் படையினர் எங்களுடன் 'பூனை - எலி விளையாட்டை' ஆடுகின்றனர் போல் தெரிகிறது'' — என்று அமெரிக்க படைக் கப்டன் டேவ் ஸ்பிரிங்கர் சொன்னார்.

## மீண்டும் விலை வீழ்ச்சி

உலகச் சந்தையில் எண்ணெய் விலை மீண்டும் வீழ்ச்சியடையத் தொடங்கியுள்ளது.

நியூயோர்க் சந்தையில் ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் 18.70 டொலராக விலை போனது. மேலும் விலை வீழ்ச்சி ஏற்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

## ரஷ்யாவுக்கு குவைத் கடன்

சோவியத் யூனியனுக்கு குவைத் அரசு 100 கோடி டொலரை கடனுதவியாக வழங்கியிருக்கிறது.

ஆக்கிரமிப்புக்கு முன்னர் பதவியில் இருந்த குவைத் அரசு இந்த 7 ஆண்டு கால கடனை வழங்கியிருப்பதாக மாஸ்கோவில் உள்ள குவைத் தூதரகம் நேற்று அறிவித்தது

பதவியிழந்த குவைத் அரசு, சவூதி அரேபியாவில் இருந்து செயல்படுவது தெரிந்ததே.

★ ஈராக்கின் ஸ்கட் ஏவுகணைத் தாக்குதலைத் தொடர்ந்து இஸ்ரவேலில் இருந்து வெளிநாட்டுப் பிரஜைகள் எகிப்து நாட்டுக்கு தப்பி ஓடுவதாகச் செய்திகள் தெரிவித்தன.

★ குவைத்தில் இருந்து ஈராக் படைகளை வெளியேற்றி ஈராக் நாட்டையும் மக்களையும் காப்பாற்றும்படி எகிப்து ஜனாதிபதி முபாரக் ஈராக் ஜனாதிபதி சதாம் ஹுசேனுக்கு நேற்று அவசர வேண்டுகோள் ஒன்றை விடுத்தார். இதுபோன்று தான் ஏற்கனவே 26 தடவைகள் வேண்டுகோள் விடுத்ததாகவும் அவர் சொன்னார்.

★ வளைகுடாவில் பறந்து சென்ற இரண்டு ஈராக்கிய ஜெட் விமானங்களை பன்னாட்டுப் போர் விமானங்கள் நேற்று சுட்டுவீழ்த்தின. அச்சமயத்தில் ஏவப்படுவதற்காக ஏவுகணைகள் அந்த ஈராக்கிய விமானங்களில் இருந்தன என்று அமெரிக்க தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

★ ஈராக்கிடம் இன்னும் சுமார் 20 ஆயிரம் விமான எதிர்ப்புத் துப்பாக்கிகள் இருப்பதாக ஒரு செய்தி தெரிவித்தது.

★ சவூதி அரேபிய பிரதேசத்தினுள் ஊடுருவல் செய்த ஈராக்கிய படைகள் விரட்டியடிக்கப்பட்டனர் என்றும்—

அப்போது 6 ஈராக்கியர்கள் சிறைபிடிக்கப்பட்டனர் என்றும் சவூதி அரசு அறிவித்தது.

★ வளைகுடாப்போர் குவைத்தை விடுதலை செய்வதற்காக இருக்கவேண்டுமேதவிர, ஈராக்கை அழிப்பதாக அமையக்கூடாது என்று மலேசியப் பிரதமர் டாக்டர் மஹதீர் நேற்று எச்சரித்தார்.

★ குவைத்தில் நிலைகொண்டுள்ள ஈராக் படைகளுக்கு ஈராக்கில் இருந்து ஆயுதங்கள் மற்றும் உணவுப் பொருள்களை அனுப்பும் பாதைகளைத் தாக்கி அழிக்கும் நடவடிக்கையில் பன்னாட்டுப் போர் விமானங்கள் தற்போது ஈடுபட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

★ வளைகுடாவில் ஈராக்கின் எண்ணெய்க் கப்பல் ஒன்றை பன்னாட்டுப்போர் விமானங்கள் தாக்கி மூழ்கடித்தன. அந்தக் கப்பலில் விமான எதிர்ப்புப் பீரங்கிகள் பொருத்தப்பட்டிருந்தன.

★ வளைகுடாப் போரினால் ஏற்பட்ட தாக்கங்களுக்கு நிவாரணமாக ஆயிரத்து 300 கோடி டொலர் நிதி உதவியை அளிக்கும்படி அமெரிக்காவை இஸ்ரவேல் கோரியுள்ளது. இக்கோரிக்கையைத் தீவிர கவனிப்புக்கு எடுத்துள்ளதாக அமெரிக்கா கூறியுள்ளது.

★ இஸ்ரவேலில் உள்ள ஹைபா துறைமுக நகர் மீது ஈராக் செலுத்திய ஸ்கட் ஏவுகணையை அமெரிக்க பேட்ரியட் ஏவுகணை நடுவானில் வைத்து அழித்து விட்டது. இது இஸ்ரவேல் மீது ஈராக் நடத்திய 4 ஆவது ஏவுகணைத் தாக்குதலாகும்.

★ ஈராக்மீது சுற்போதைக்கு பதில் தாக்குதலை மேற்கொள்வது இல்லை என்று இஸ்ரவேல் அரசு தீர்மானித்துள்ளது.

★ சவூதி அரேபியாவில் உள்ள தெஹ்ரான் பன்னாட்டுப் படைத் தளத்தை நோக்கி ஈராக் நேற்றுச் செலுத்திய மூன்று ஸ்கட் ஏவுகணைகளை பேட்ரியட் ஏவுகணைகள் நடுவானில் வைத்து அழித்து விட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி கனகசபை செல்லம்மா

காரைநகர் களபூமியைச் சேர்ந்த காலம் சென்ற ஆசாரியார் கனகசபையின் மனைவி செல்லம்மா காலமாகிவிட்டார்.

இவர் மகேஸ்வரி, இரேசம்மா, மனோன்மணி, லோகேஸ்வரி ஆகியோரின் அன்புத் தாயாரும் வீரசிங்கம், தேவநேசன், கந்தசாமி, குகபாலம் ஆகியோரின் மாமியாரும், திருஞானசம்பந்தனின் பெரிய தாயும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 24 - 1 - 91 (வியாழன்) அன்று நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

தகவல்:

வை. கந்தசாமி (சாமி).

(15608)

## திருமதி மகேஸ்வரி செல்வரத்தினம்

திருமதி. மகேஸ்வரி செல்வரத்தினம் தாவடியில் அவரது இல்லத்தில் 23-1-91 காலை சிவபதம் அடைந்து விட்டார். இவர் காலஞ்சென்ற மயில்வாகனம் சிவபாக்கியம் தம்பதிகளின் ஏகபுத்திரியும், இளைப்பாறிய தபால் அதிபர் திரு. மார்க்கண்டு செல்வரத்தினத்தின் அன்பு மனைவியும், ஜெகதாம்பிகை (லண்டன் முன்னைநாள் யாழ் மக்கள் வங்கி உத்தியோகத்தர்), சோபனா, ஜமுனா (D.A.M) ஆகியோரின் அன்புத்தாயாரும், விக்னேஸ்வரன் (லண்டன்), கமலநாதன் (சிற்றூர் அவைத்தலைவர் தாவடி), சுந்தரகுமார் (கனடா முன்னைநாள் மருத்துவப் பிரதிநிதி, லங்கா மெடிக்கல்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், சித்திராங்கனின் பாசமிகு பேத்தியும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 23 1-91 மாலை 5.00மணியளவில் தாவடி மயானத்தில் நடைபெற்றன.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் மிக மனவருத்தத்துடன் அறியத் தருகின்றோம்.

தகவல்:

மா. செல்வரத்தினம்
நா, கமலநாதன் (ஹரி)

(15606)

## திருமதி லீனா பரஞ்சோதி

யாழ். ஆஸ்பத்திரி தாதி உத்தியோகஸ்தர் திருமதி லீனா பரஞ்சோதி நேற்றுக் காலமானார்.

இவர் காலஞ்சென்ற அடைக்கலம், சவினம் தம்பதிகளின் மகளும், அ. பரஞ்சோதியின் மனைவியும், கௌதமியின் தாயும், ஞானப்பிரகாசம், சிசிலியா, இமானுவேல் ஆகியோரின் சகோதரியும், புத்தூர் அரியகுட்டி, செய்வானை தம்பதிகளின் மருமகளும், அருள்தாசன், லீலாவதி மாக்கிரெட், சந்திரவதனி, சந்திரவிம்பம், சந்திராதேவி, பஞ்சமூர்த்தி, பரமலிங்கம், சந்திரலேகா, பவானந்தன் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 48. சென். பற்றிக்ஸ் வீதி, யாழ்ப்பாணம் இல்லத்திலிருந்து இன்று மாலை 4-15 மணிக்கு நல்லடக்கத்திற்காக கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

தகவல்:

(15249) அ. பரஞ்சோதி

## திருமதி சபாபதிப்பிள்ளை முத்துப்பிள்ளை

புங்குடுதீவு 7ஆம் வட்டாரம் ஊரதீவை சேர்ந்த காலஞ்சென்ற சபாபதிப்பிள்ளை அவர்களின் மனைவி முத்துப்பிள்ளை (தங்கம்) 23 - 1 - 91 புதன் கிழமை காலமாகிவிட்டார். இவர் திரு. கந்தையாவின் தாயாரும், திருமதி அன்னலெட்சுமியின் மாமியும் ஆவார் அன்னாரின் ஈமக்கிரியைகள் 24 - 1 - 91 வியாழக்கிழமை பிற்பகல் 4.00 மணியளவில் கேரதீவு மயானத்தில் நடைபெற்றன.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:

(15600) குடும்பத்தினர்.

## திருமதி சச்சிதானந்தன் சிவஞானவதியார்

வட்டு மேற்கில் வசித்த திருமதி ச. சிவஞானவதியார் 23 - 1 - 91 காலை அகால மரணமானார்.

அன்னார் அ. சச்சிதானந்தன் அவர்களின் அன்பு மனைவியும் அருட்செல்வன் (அருள்). குருபரன் (பரன்). கௌசல்யா (யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார். அன்னாரின் தகனக்கிரியை அன்று காலை 10-30 மணிக்கு நடைபெற்றது. உறவினர்களும், நண்பர்களும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகனக் கிரியையில் பலவித உதவிகள் செய்த அன்பர்களுக்கும், கலந்துகொண்டவர்களுக்கும் எமது மன பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தகவல்:

(14916) கணவன்

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 25 - 1 - 1991 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# புதிய விலை

சாவகச்சேரிப் பகுதியில் இதுவரை 14 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட ஒரு இறாத்தல் பாண் இன்று 25ஆம் திகதி முதல் 8 ரூபா 50 சதமாக விற்பனை செய்யப்படும். சாவகச்சேரி கைத்தொழில் வர்த்தகர் சங்கம் இதற்கான முடிவை எடுத்துள்ளது.

நேற்று நடைபெற்ற சங்கக் கூட்டத்தில், பாணின் நிறை 350 கிராமிற்குக் குறையக்கூடாது எனவும், மொத்த விலை 8 ரூபா எனவும், சில்லறை விலை 8 ரூபா 50 சதம் எனவும் தீர்மானிக்கப்பட்டதாக வர்த்தகர் சங்கத் தலைவர் திரு. கு. தவராசசிங்கம் தெரிவித்தார். [அ-74]

# ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், ஜன.25

நாளை நடைபெறவிருந்த யாழ் மாவட்ட சிக்கன கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாச தாபகரும் அதன் முன்னாள் தலைவருமான அமரர் திரு. ச. ஞானப்பிரகாசத்தின் நினைவஞ்சலிக் கூட்டம் தவிர்க்க முடியாத காரணத்தால் பிற்போடப்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. [உ]

# மீண்டும் இயங்கும்

நாளை சனிக்கிழமை தொடக்கம் மாட்டிறைச்சிக் கடைகள் மீண்டும் சின்னக் கடையில் இயங்கும் என்று இறைச்சிக்கடை உரிமையாளர்கள் தெரிவித்து உள்ளனர்.

குருநகர் நவீன சந்தை, மீன்—மரக்கறி சந்தை ஆகியவையும் அன்றைய தினம் சின்னக்கடையில் இயங்குமெனத் தெரியவருகிறது. [உ-51]

# அழைப்பு

நாடாளுமன்றம் நேற்று முன்தினம் கூடியபோது புதிய எம். பியாக பதவிப் பிரமாணம் செய்வதற்கு சபாநாயகர் அல்ஹாஜ் முஹமது டாக்டர் நீலன் திருச்செல்வத்தின் பெயரை அழைத்தார்.

ஆனால் டாக்டர் நீலன் திருச்செல்வம் சபையில் இருக்கவில்லை.

## ஐ. தே. க. .

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிறிலங்கா சுதந்திரக் கட்சி அதற்கு துணைபுரியும் என்று—வைபவத்தில் கலந்துகொண்ட திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா தெரிவித்தார்.

விடுதலைப் புலிகள் பிடிவாதமாக இருந்த போதிலும் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண முடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## ஆபத்து...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரினையோ, அஸ்பிரின் கலந்த வேறு மருந்து வகைகளையோ கொடுக்க வேண்டாம் என்று யாழ். மாவட்டத்தில் உள்ள தனியார் வைத்தியர்களுக்கும் யாழ். ஆஸ்பத்திரி வட்டாரங்கள் ஆலோசனை கூறியுள்ளன.

அஸ்பிரினுக்குப் பதிலாக பரசெற்றாமோல், செற்றாமோல், கல்போல் ஆகிய மாத்திரைகளைக் கொடுக்கலாம் எனத் தெரிவிக்கப்பட்டது.

## பதுக்கல்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலை மாணவர்கள், கடற்றொழிலாளர்கள், தனியார் நிறுவன தொழிலாளர்கள், ஆசிரியர்கள், கூட்டுறவாளர்கள் உட்பட பல்துறைப்பட்ட மக்கள் பேரணியில் கலந்து கொண்டனர்.

பேரணியில் சென்றவர்களால் பல்வேறு மகஜர்கள் செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழு அதிகாரிகளிடமும், யாழ்-அரச அதிபரிடமும் ஒப்படைக்கப்பட்டன.

பேரணி முடிவில் செயலகத்துக்கு முன்னால் கண்டனக் கூட்டமும் இடம்பெற்றது. பல் ...... அங்கு உரை நிகழ்த்தினார்கள். [உ-3-15]

# மேலும் பொருள்களின் விலைகள் நிர்ணயம்

யாழ்ப்பாணம், ஜன. 25

மேலும் சில அத்தியாவசிய பொருள்களின் உயர் விற்பனை விலையை யாழ். வர்த்தகர்கள் நேற்றுக் கூடி முடிவு செய்ததாக தெரிவிக்கப்பட்டது. அவற்றின் விவரம் வருமாறு:-

| பொருள் | மொத்த விலை | சில்லறை விலை |
|---|---|---|
| | ரூ. ச. | ரூ. ச. |
| வெள்ளைப்பச்சை அரிசி | 27-00 | 29-00 |
| கோறா வெள்ளை அரிசி | 27-00 | 29-50 |
| சம்பா அரிசி | 30-00 | 31-00 |
| லக்ஸ் | 8-00 | 9-00 |
| லைபோய் | 7-75 | 8-75 |
| ரெக்ஸோனா | 7-30 | 8-30 |
| வொண்டர்லைற் (சிறியது) | 6-95 | 7-95 |
| லக்டோஜின் (முழு ஆடை) | 68-00 | 70-00 |
| நெஸ்ரோமோல்ட் (ரின்) | 81-50 | 83-50 |
| செர்லக் | 71-50 | 73-50 |
| அங்கர் | 54-50 | 56-50 |
| கிறீம் கிறக்கர் | 25-50 | 27-50 |

பெரும்பாலும் இப்பொருள்களின் விலைகள் வர்த்தக நடவடிக்கைகளுக்கு இடையூறின்றி இருப்பதை கவனத்தில் கொண்டே விலைகள் நிர்ணயிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

மேலும் ஒரு தொகுதி பொருள்களின் நிர்ணயிக்கப்பட்ட விலை விவரம் விரைவில் வெளியிடப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# களஞ்சியங்கள் பற்றி அறிவிக்க அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜன.25

வர்த்தகர்கள் தமது பொருள்களை களஞ்சியப் படுத்தும் இடங்களின் முகவரிகளை வர்த்தகர் சங்கத்தில் உடன் பதிவு செய்யும்படி சங்கத்தின் விலைக்கட்டுப்பாட்டுப் பிரிவினர் கேட்டுள்ளனர்.

மொத்த வியாபாரிகளும் சில்லறை வியாபாரிகளும் தத்தமது களஞ்சியங்களில் மட்டுமே பொருள்களை களஞ்சியப்படுத்தல் வேண்டும் என்றும்—

பதிவு செய்யப்படாத இடங்களில்களஞ்சியப் படுத்தல் கண்டுபிடிக்கப்பட்டால் கட்டட உரிமையாளர்கள் கடும் தண்டனைக்குள்ளாக்கப்படுவதுடன் பொருள்களும் பறிமுதல் செய்யப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. [உ]

# பதுக்கல் பேர்வழிகள் புலிகளின் வலையில்!

கைதடி, ஜன, 25

மண்ணெண்ணை மற்றும் அத்தியாவசியப் பொருள்களைப் பதுக்கி வைத்திருப்போரை மடக்கிப் பிடிக்கும் பணியை விடுதலைப் புலிகள் பரவலாக ஆரம்பித்துள்ளனர்.

தென்மராட்சிப் பகுதியில் பல வர்த்தகர்கள் நேற்று மாட்டிக்கொண்ட சம்பவங்கள் தெரியவந்துள்ளன.

சாவகச்சேரியில் உள்ள ஒரு வர்த்தகர், மண்ணெண்ணையைப் பதுக்கி வைத்து அதிக கலப்படம் செய்து விற்பனைக்கு வாகனத்தில் ஏற்றிய போது பிடிக்கப்பட்டார்.

அதேபோல அதிக விலைக்கு விற்ற ஒருவரின் வீடு சோதனையிடப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருந்த மண்ணெண்ணை மீட்கப்பட்டது.

சன்லைட் சவர்க்காரத்தை கட்டுப்பாட்டு விலையை விட அதிக விலைக்கு விற்ற ஒருவர் சாவகச்சேரி சந்தையில் வைத்து மடக்கப்பட்டார்.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் பதுக்கல் பேர்வழிகளை தேடி மடக்கிப்பிடிக்கும் பணி முடுக்கிவிடப்பட்டிருப்பதாக செய்திகள் கிடைத்துள்ளன. [அ-74]


யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி

நூற்றாண்டு நிறைவு தொடர்பாக....

## சுவாமி விவேகானந்தர் விழா

இடம்; பிரார்த்தனை மண்டபம்.

காலம்; 25-01-1991 காலை 8-30 மணி.

தலைவர்: திரு. க. சி. குகதாசன் M.Sc.
(அதிபர், யாழ். இந்துக் கல்லூரி)

இறை வணக்கம்: செல்வன் க. பிரதாபன்.

வரவேற்புரை: செல்வன் த. சசிதரன்
(தலைவர், இந்து இளைஞர் கழகம்)

தலைமையுரை: அதிபர்.

சொற்பொழிவுகள்: "வீரத் துறவி விவேகானந்தர்"
- செல்வன் சோ. ராஜ் தணிகைச்செல்வன்

"The Great Hindu Monk of India"
- செல்வன் ச. வரதன்

விசேட சொற்பொழிவு: 'சுவாமிகளின் சிந்தனைகள்"
- திரு. கனகசபாபதி நாகேஸ்வரன் M.A.
(விரிவுரையாளர், யாழ். பல்கலைக்கழகம், தமிழ்துறை)

நன்றியுரை; செல்வன் தா. விவேகானந்தன்
(பொருளாளர், இந்து இளைஞர் கழகம்)

இறை வணக்கம்: செல்வன் இ. குகானந்தன்.

செயலாளர்,

இந்து இளைஞர் கழகம்.

(இ/5685)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org